

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் தேர்வுநிலை பேரூராட்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், கலைஞர் நகர் புற மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.1.02 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தினை, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 15.03.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், கீரனூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.த.ஜெயமீரா ரவிக்குமார், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.





பொதுப்பணித்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள பொறியாளர்களுக்கான பயிலரங்கத்தை சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராயச்சி நிலைய அரங்கத்தில் நேற்று, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார். இத்துவக்க விழாவில் பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் & தலைமை பொறியாளர் (பொது) கே.பி சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே. ஆயிரத்தரசு இராஜசேகரன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ். இரகுநாதன், கோவை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ். காசிலிங்கம், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எ.வள்ளுவன், உணவுப் பொருள் வழங்கல் & பாதுகாப்புத்துறை தலைமைப் பொறியாளர், அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை தலைமைப் பொறியாளர் பெரியசாமி மற்றும் இதர பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சீர்மரபினருக்கு டி.என்.டி.ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

# ஒப்பற்ற தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ்நாடு அரசு சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி அறிக்கை!

சென்னை, மார்ச் 18-

சீர்மரபினருக்கு DNT ஒற்றை சான்றிதழ் வழங்கி ஆணை பிறப்பித்த ஒப்பாருமிக்காருமில்லா முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி என சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி தெரிவித்துள்ளார்.



அவரது நன்றி அறிக்கை வருமாறு:-

சீர்மரபினர் இன மக்களுக்கு ஒரே மாதிரியான சான்றிதழ் வழங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதால் குழப்பமான சூழ்நிலை இருந்தது. இதனை அகற்றுவதற்கான முயற்சியை எடுப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். 'சொன்னதைச் செய்வோம்' என்ற முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்கள், அந்த இரட்டை சான்றிதழ் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப்பட்டார்கள். இம்மக்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கான பல்வேறு வழிமுறைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தினார்கள்.

1969 ஆம் ஆண்டு முதல் முதலில் முதல்வர் ஆன கலைஞர் அவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை உருவாக்கினார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார்கள். அந்தப் பரிந்துரைப்படி சமூகநீதியை அமல்படுத்தினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருடன் சேர்த்து 20 விழுக்காடு இடஒதுக்கீடு இம்மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 68 வகுப்பினர்கள் சீர்மரபினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் 2008 முதல் சீர்மரபினர் வகுப்பினர் என சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் 2019 ஆம் ஆண்டில் அன்றைய அரசால் மாறுபாடான அறிவிப்பு செய்யப்பட்டது. மாநில அரசின் உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர் எனவும், ஒன்றிய அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப்படுவர் என ஆணை வெளியிடப்பட்டது. இது குழப்பத்தை ஏற்படுத்தியது.

மேற்கண்ட அரசாணைகளின்படி இரண்டு சான்றிதழ்கள் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என இரண்டு சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பினர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒற்றைக் கையெழுத்தில் உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல திராவிடப் பேரினத்தின் தலைவராகச் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் பொற்கால ஆட்சி தொய்வில்லாமல் தொடரட்டும் என வாழ்த்துகிறோம்.

இவ்வாறு இராசா அருண்மொழி நன்றி தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் முடிவற்ற பணிகளின் பெயர் பலகை திறந்து வைத்தும் 45 லட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டில் பழங்குடியின மக்களுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதர், திருவேங்கடம் உள்ளனர்.

### தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் பா.ஜ.க.வை ஏற்க மாட்டார்கள்! எத்தனை முறை தமிழ்நாடு வந்தாலும்

# மோடி தமிழ்நாட்டு மக்களின் கோபத்திலிருந்து மீளவே முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை, மார்ச் 18-

"பிரதமர் மோடி எத்தனை முறைதான் தமிழ்நாடு வந்தாலும், தமிழ்நாட்டு மக்களின் கோபம் - வெறுப்பிலிருந்து மீளவே முடியாது!" என்று, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. குறிப்பிட் டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

கன்னியாகுமரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி யைப் பற்றி ஆதாரமற்ற அவதூறு குற்றச்சாட்டுகளை கூறியிருக்கிறார். இக்கூட்டணியின் நோக்கம் ஊழல் ஆட்சியின் மூலம் கொள்ளையடிக்க வேண்டுமென்பது தான் இலக்கு என்று பேசியிருக்கிறார். 2ஜி யில் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டியிருக்கிறார். அன்று சி.ஏ.ஜி. அளித்த அறிக்கையில், 2ஜி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசுக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டதாக அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில், டாக்டர் மன்மோகன்சிங் ஆட்சியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

**பிரதமர் மோடிக்கு இது அழகல்ல!**

அந்த வழக்கு சில ஆண்டுகள் நடைபெற்று, எந்த ஆதாரத்தையும் குற்றம் சாட்டியவர்கள் வழங்க முடியாத காரணத்தால் குற்றவாளிகளை நிரபராதிகள் என சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி தமது தீர்ப்பில் கூறியிருந்தார். குற்றச்சாட்டு கூறியவர்கள் ஆதாரம் தருவார்கள் என்று பல மாதங்கள் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தேன் என்றும் அவர் கூறியதை எவரும் மறக்க இயலாது. உண்மை நிலை இருப்படியிருக்க திரும்பவும் 2ஜி சேற்றை வாரி இறைப்பது பிரதமர் பதவியில் இருக்கும் மோடிக்கு அழகல்ல.

அன்று 2ஜி அறிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கி குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு தொடுத்ததைப் போல, 2023 டிசம்பரில் சி.ஏ.ஜி. அளித்த அறிக்கையில் ஒன்றிய நெடுஞ்சாலைத் துறையின் 7 திட்டங்களை ஆய்வு செய்தது. அதன்படி பாரத் மாலா திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள சாலைகள், நெடுஞ்சாலைகள், விரைவு சாலைகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டத்தில் 34,800 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 5 லட்சத்து 35 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 1 கி.மீ. தூரமுள்ள சாலைக்கு ரூபாய் 15.37 கோடி டெண்டர் மூலம் ஒதுக்கப்பட்டது. ஆனால், 26,316 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 8 லட்சத்து 46 ஆயிரத்து 588 கோடி செலவாகியிருக்கிறது. அதன்படி 1 கி.மீ. சாலை அமைக்க ரூபாய் 32.17 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது அனுமதிக்கப்பட்ட அளவை விட 1 கி.மீ. தூரம் சாலை அமைக்க ரூபாய் 16.80 கோடி அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. அதேபோல, துவாரகா சாலை திட்டத்திற்காக ரூபாய் 9,000 கோடி ஒதுக்கப்பட்டது. 1 கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 18 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், செலவழிக்கப்பட்டதோ ரூபாய் 250 கோடி. இது ஏறத்தாழ 13 மடங்கு அதிகமாகும்.

மேலும், நாட்டிலுள்ள 600 சுங்கச்சாவடிகளில் 5 சுங்கச்சாவடிகளை சி.ஏ.ஜி. ஆய்வு செய்தது. அதில் சட்ட விதிகளுக்கு புறம்பாக ரூபாய் 132 கோடி வசூல் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத்துறையில் நடைபெற்ற ஊழல் முறைகேடுகள் குறித்து சி.ஏ.ஜி. அறிவிப்பின் அடிப்படையில், அன்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ததைப் போல இன்று எந்த நடவடிக்கையையும் பா.ஜ.க. அரசு ஏன் எடுக்கவில்லை ? தன்னை புனிதமானவர் என்று தம் பட்டம் அடித்துக் கொள்கிற மோடி, சி.ஏ.ஜி. அறிக்கைக்கு என்ன பதில் கூறப் போகிறார் ? இது ஊழல் இல்லை என்றால் எது ஊழல் என்பதை மோடி விளக்க வேண்டும்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் 10 ஆண்டு கால ஆட்சியில் டாக்டர் மன்மோகன்சிங் உள்ளிட்ட எந்த காங்கிரஸ் தலைவர்கள் மீதும், எந்த நீதிமன்றத்திலும், எந்த ஊழல் வழக்கும் இல்லை. அப்படி ஏதாவது ஊழல் நடந்திருந்தால் 10 ஆண்டுகால மோடி ஆட்சியில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? இந்நிலையில், காங்கிரஸ் கட்சி மீது குற்றம் சாட்டுவதற்கு மோடிக்கு எந்த உரிமையும் இல்லை.

**தமிழக மக்களிடம் இது எடுபடாது!**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தது தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி ஆட்சி தான் என்று மோடி குற்றம் சாட்டியிருக்கிறார். தமிழகத்தில் பாரம்பரியமாக நடந்து வந்த ஜல்லிக்கட்டுக்கு காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பதவி விலகுகிற 2014 ஆம் ஆண்டு வரை எந்த தடையும் விதிக்கப்படவில்லை. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மிகச் சிறப்பாக நடந்து வந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு 2015 இல் முதல் முறையாக தடை விதிக்கப்பட்டது. ஆனால், தமிழக அரசு எடுத்த தீவிர முயற்சியின் விளைவாக விதிவிலக்கு பெற்று ஜல்லிக்கட்டு நடைபெற்றது. மீண்டும் ஒன்றிய அரசு விதித்த தடையை எதிர்த்து தான் மெரினாவில் மாபெரும் போராட்டம் நடத்தி ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி பெறப்பட்டது. இத்தகைய உரிமைப் போராட்ட வரலாற்றை முழு பூசணிக் காயை சோற்றில் மறைக்கிற வகையில் பிரதமர் மோடி பேசியிருக்கிறார். இது தமிழக மக்களிடம் எடுபடாது.

தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் தமிழ் மொழியின் மீது பாசத்தை பொழிவது போல் பேசுகிறார் பிரதமர் மோடி. உங்களிடம் தமிழில் பேசப் போகிறேன் என்கிறார். உங்கள் மொழிக்கு மரியாதை வழங்க துடித்துக் கொண்டிருப்பதாக கூறுகிறார். ஆனால், செம்மொழி தகுதி பெற்ற தமிழ் மொழிக்கு 2017 முதல் 2020 வரை ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகை ரூபாய் 12.31 கோடி மட்டுமே. ஆனால், 24,000 பேர் மட்டுமே பேசுகிற சமஸ்கிருத மொழிக்கு அதே காலக்கட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூபாய் 643.84 கோடி . 8 கோடி மக்கள் பேசுகிற தமிழ் மொழிக்கு ஒதுக்கிய தொகையை விட 50 மடங்கு அதிகமாக காலாவதியான சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் மோடியின் தமிழ் பாசத்திற்கு அடையாளம். மோடியின் இரட்டை வேடத்திற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் ?

**சரியான பாடம் புகட்டுவார்கள்!**


மோடியின் தமிழக விரோத போக்கை முற்றிலும் அறிந்து வைத்திருக்கிற தமிழ்நாட்டு மக்கள் இதற்கெல்லாம் ஏமாற மாட்டார்கள். மோடி தமிழகத்திற்கு எத்தனை முறை வந்தாலும் மக்களின் வெறுப்பிற்கும், கோபத்திற்கும் ஆளாகியிருப்பதிலிருந்து மோடி மீளவே முடியாது. தமிழ்நாடு என்பது, பா.ஜ.க.வின் எதிர்ப்பு பூமி. தமிழக மக்கள் எந்த காலத்திலும் பா.ஜ.க.வை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விரைவில் நடைபெறவுள்ள மக்களவை தேர்தலில் 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழக விரோதப் போக்கிற்கு சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் வே. ஆல்பன்

### மார்ச் 18 (1999)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர்.

திருவட்டாறு ஒன்றியத் தலைவராகவும் பின்னர் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடிநிலையின்போது மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

"இனிய இயல்பினர், எவரிடத்தும் பண்புடன் பழகக்கூடிய மனப்பக்குவமுடையவர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ. சுப்ரமணியன்

### மார்ச் 18 (2012)



காஞ்சிபுரம் நகரக் கழகச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியினை சிறப்பாக மேற்கொண்டவர்.

நகர்மன்ற துணைத் தலைவராகவும், பெருநகர மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடி நிலைக் காலத்தில் ஒரு வருடம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். இதுதவிர கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**